# அறத்தின் குரல் அறிக்கை

தூய நெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி), திருப்பத்தூர், திருப்பத்தூர் மாவட்டம் தமிழ் முதுகலை மற்றும் ஆய்வுத்துறை நடத்திய அறத்தின் குரல் நிகழ்வு - 4 இல் “இயற்கையை இளைஞர்கள் பாதுகாக்கிறார்களா? அழிக்கிறார்களா?” என்னும் தலைப்பில் 06.12.2019 அன்று மாலை 6.00 மணியளவில் கரேஞ்சோ அரங்கத்தில் விவாத மேடை தொடங்கியது.

இந்நிகழ்ச்சியில் அருட்தந்தை முனைவர் சி. அந்தோணிராஜ், இல்லத்தந்தை, தூய நெஞ்சக் கல்லூரி அவர்கள் ஆசியுரை வழங்கினார். அருட்தந்தை முனைவர் டி. மரிய அந்தோணி ராஜ், முதல்வர், தூய நெஞ்சக் கல்லூரி அவர்கள் தலைமை வகித்தார். அருட்தந்தை முனைவர் பிரவின் பீட்டர், துணை முதல்வர், பிரிவு - 1, தூய நெஞ்சக் கல்லூரி, அருட்தந்தை முனைவர் கே. ஏ. மரிய ஆரோக்கியராஜ், கூடுதல் முதல்வர், பிரிவு - II, தூய நெஞ்சக் கல்லூரி அவர்களும் வாழ்த்துரை வழங்கினார்கள்.

இவ்விவாதத்தில் இயற்கையை இளைஞர்கள் பாதுகாக்கிறார்கள் என்னும் தலைப்பில் வெ. ஹேமலதா, II ஆங்கிலம், பிரிவு - I, சி. பரத், II கணிதம், பிரிவு - I, செ. நந்தகுமார், I வணிகவியல், பிரிவு - 1, சி. மாணிக்கவேல், II வணிகவியல், பிரிவு - 1, ஆகியோர்களும், இயற்கையை இளைஞர்கள் அழிக்கிறார்கள் என்னும் தலைப்பில் து. இலக்கியா, ▯ ▯கணிதம், பிரிவு - 1, சா. செல்வகுமார், I இயற்பியல், பிரிவு - I, இ. பெளிக்ஸ் சேவியர், முதுகலை கணிதம் இரண்டாமாண்டு, பிரிவு - 1, ம. நிஷா, III ஆங்கிலம், பிரிவு - I கலந்துக் கொண்டு தங்களுடைய கருத்துகளை முன்வைத்து விவாதித்தனர்.

இந்நிகழ்ச்சியில் தமிழ்த்துறைப் பேராசிரியர் முனைவர் க. மோகன்காந்தி அவர்கள் நெறியாளுகையாளராகவும், நடுவராகவும் இருந்து கொண்டு இன்றைய இளைஞர்கள் பொறுப்பைத் தட்டிக் கழிக்கவில்லை வரும், ஆபத்தை உணராமல் இருக்கிறார்கள் என்றும், எல்லா நிலைகளிலும் இயற்கையை பாதுகாக்கிறோம் என்று கூறினாலும் கூட இன்றைய சூழ்நிலையில் நீர்நிலைகளில் தண்ணீர் இல்லை, விளைநிலங்கள் கட்டடங்களாகவும், குடியிருப்பு பகுதியாகவும் மாறிக்கொண்டு இருக்கிறது என்றெல்லாம் கூறி இன்றைய இளைஞர்கள் இயற்கையை அழித்துக்கொண்டு தான் இருக்கிறார்கள் என்று தீர்ப்பு வழங்கி விவாத நிகழ்ச்சியை சிறப்புற நிறைவு செய்தார்.